

இணையவழி வகுப்பு - 13.11.2020

சுற்றாடல்

தொகுப்பு:-ஐ.சிவசங்கரலிங்கம்

காந்தம்

- கவரும் தன்மையைக் கொண்ட பொருள் காந்தம் ஆகும்.

காந்தம் கவரும் பொருட்கள்.

1. இரும்பாணி
2. குண்ஞசி
3. சட்டைப்பின்
4. சவரஅலகு
5. தகரம் போன்றவை

காந்தத்தின் வகைகள்



சட்டக்காந்தம்

“ப” வடிவக்காந்தம்



www.kedu.lk

பரிலாடக் காந்தம்





ஊசிமுனைக் காந்தம்

திசைகாட்டி





வளையக்காந்தம்

உருளைக் காந்தம்





வட்டக் காந்தம்

www.kalvi.tn.gov.in




நீள்கோள வடிவக் காந்தம்

பொத்தான் வடிவக் காந்தம்



- காந்தம் ஒன்றிற்கு வடமுனை, தென்முனை என இருமுனைகள் உண்டு.
- வடமுனை சிவப்பு (N) நிறத்தினாலும், தென்முனை நீல (S) நிறத்தினாலும் காட்டப்படும்.
- சட்டக் காந்தம் ஒன்றை நூலில் கட்டி சுயாதினமாக தொங்கவிடும் போது அது வடக்கு தெற்குத் திசையில் ஓய்வு பெறும்.
- காந்தம் ஆக்குவதற்கு உருக்கு பயன்படும்.
- காந்தத்தின் ஒத்த முனைகள் தள்ளும்.
- ஒவ்வாத முனைகள் கவரும்.

காந்தம் ஒன்றை ஒன்று கவரும் விதம்




www.kcan.lk

மின்காந்தம்


மின்சாரத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் காந்தம் “மின் காந்தம்” ஆகும்

தேவையான பொருட்கள்

1. உலர்மின்கலம்
2. இரும்பாணி
3. காவலிடப்பட்ட செப்புக்கம்பி
4. குண்டூசி/பேப்பர் கிளிப்



www.tkedu.lk



✓ மின்காந்தத்தின் கவரும் தன்மை ஆணியின் அந்தங்களில் அதிகமாகக் காணப்படும்.

மின்காந்தத்தின் கவரும் தன்மையை அதிகரிக்கச் செய்ய வேண்டியது.

1. உலர் மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
2. கம்பிச் சுருள்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

www.kcsu.lk

மின்காந்தம் பயன்படுத்தப்படும் பொருட்கள்



மின்மணி



மின்பாரம் தூக்கி

www.lkedu.lk

சுற்றாடல் வினாக்கள்.

1. நான்கு இதழ்கள் உள்ள மலருக்கு உதாரணம்.

1) மல்லிகை 2) காட்டு மல்லிகை 3) வெட்சி

2. தனது வீடாகப் புற்றை அமைக்கும் விலங்கு யாது?

1) பாம்பு 2) தேனீ 3) கறையான்

3. ஆண்டின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மாத்திரம் காய்க்கும் தாவரங்கள்.

1) வாழை, கொய்யா 2) கொய்யா, பப்பாசி 3) பாலை, றம்புட்டான்

4. துப்புரவற்ற நீரைப் பருகுவதனால் பீடிக்கும் நோய்.

1) செங்கண்மாரி 2) தடிமன் 3) குக்கல்

5. பின்வரும் பிராணிகளுள் ஊர்வன அல்லாதது

1) ஆமை 2) தவளை 3) உடும்பு

www.kedu.lk

6.பச்சையாக வெட்டிய எம் மரக்கறித் துண்டுகள் சிலவற்றைப் பாத்திரத்தில் உள்ள நீரில் இடும் போது அந்நீரின் நிறத்தை மாற்றக் கூடிய மரக்கறி

1) கரட் 2) கத்திரிக்காய் 3) பீற்றூட்

7. இலங்கையில் அதிக மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்

1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) மேல் மாகாணம்

8. மேசன் பயன்படுத்தும் உபகரணம்,

1) துறப்பணம் 2) தூக்குக்குண்டு 3) அரம்

9. காந்தம் கவரும் பொருட்கள் மாத்திரம் அடங்கிய விடை

1) அலுமினியம், உருக்கு 2) உருக்கு, இரும்பு 3) பித்தளை, நிக்கல்

10. பின்வரும் உணவுகளில் சக்தி தரும் உணவு எது?

1) பசளி 2) தோடம்பழம் 3) கருப்பட்டி

www.kedi.lk

11. நுளம்புகள் பெரும்பாலும் எவ்வேளைகளில் வீட்டிற்குள் நுழைகின்றன?

1) காலை 2) மாலை 3) நண்பகல்

12. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டு ஒழுங்குமுறையில் இரண்டாவது படிநிலை

1) மனதைத் தளர்த்துதல் 2) பிரார்த்தனை 3) உடலைத் தளர்த்துதல்

13. மரக்கிளைகள் விதானம் போன்று (குடை போன்று) அமைந்திருப்பதால் ஏற்படும் நன்மை எது?


1) மண்ணரிப்பு ஏற்படும். 2) மண்ணிற்குரிய ஒளி கிடைக்காது.
3) மண்ணரிப்பு தடுக்கப்படும்.

14. வான வில்லில் உள்ள ஏழு நிறங்களாக அமைவது

1) சிவப்பு, நீலம், ஊதா, மஞ்சள், பச்சை, செம்மஞ்சள், கறுப்பு
2) ஊதா சிவப்பு, கருநீலம், மஞ்சள், பச்சை, நீலம், செம்மஞ்சள்
3) சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம், கறுப்பு, வெள்ளை

www.kedu.lk

15. இவ் உபகரணத்தின் பெயர்



1) ஒற்றைச்சில்லு வண்டி
2) விளையாட்டு வண்டி
3) சுற்றும் வண்டி

16. ஆரோக்கியமான வித்தொன்று முளைப்பதற்கு அவசியமான காரணிகள் மூன்றையும் உள்ளடக்கிய விடை

1) சூரியஒளி, வெப்பம், வளி 2) தகுந்த வெப்பம், வளி, நீர்
3) நீர், சூரியஒளி, வளி

17. மஞ்சள் நிறத்தையும் நீலநிறத்தையும் கலக்கும் போது உண்டாகும் நிறம்?

1) கபிலம் 2) செம்மஞ்சள் 3) பச்சை

18. ஒலிம்பிக் கொடியின் பின்னணி நிறம் யாது?

1) வெள்ளை 2) சிவப்பு 3) மஞ்சள்

19. சக்தி குறைவாக விரயமாகும் விளையாட்டு எது?

1) கயிறிழுத்தல் 2) தாயம் 3) ஓடுதல்

www.ikeda.lk

20. சர்வதேச புத்தக தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

1) ஏப்ரல் 22 2) ஏப்ரல் 23 3) மார்ச் 8

21. இலங்கையிலுள்ள இயற்கைத் துறைமுகம் எது?

1) காலி 2) கொழும்பு 3) திருகோணமலை

22. நீல நிறக்குருதியை உடைய பிராணி எது?

1) வண்ணத்துப்பூச்சி 2) இறால் 3) கிளி

23. இலங்கையின் தேசிய மலர் எது?

1) அல்லி 2) நீல அல்லி 3) தாமரை

24. நாற்று மேடைகளில் விதைகளை இட்டு முளைக்கச் செய்தபின் கன்றுகள் பெறப்படும் தாவரம்
எது?

1) வெண்டி 2) கோவா 3) பூசணி

www.ikeduk

25. இரு சமாந்தர தளவாடிக்கு மத்தியில் பொருள் ஒன்றை வைக்கும் போது தோன்றும்
விம்பங்களின் எண்ணிக்கை யாது?
1) இரண்டு 2) மூன்று 3) பல

26. தாவரக்கொழுப்பு உணவாக அமையும் உணவு எது?
1) பட்டர் 2) மாஜரின் 3) பாற்கட்டி

27. நீரில் அமிழக் கூடிய திரவப்பொருட்கள் அமையும் விடையைத் தெரிவு செய்க.
1) பால், இளநீர் 2) பெற்றோல், டீசல் 3) இரசம், கிளிசரின்

28. இலங்கையின் தேசிய மரத்தின் பூவின் நிறம் எது?
1) வெள்ளை 2) நீலம் 3) இளஞ்சிவப்பு

www.ikeu.lk

29. வீட்டில் தனியாக பயன்படுத்தப்படும் உபகரணம்?

1. பற்தூரிகை 2. கணினி 3. பற்பசை

30. உழவனின் நண்பன் என அழைக்கப்படும் உயிரினம்?

1. பாம்பு 2. தேனீ 3. மண்புழு

www.lkedu.lk

தமிழ்மொழி

பின்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்களின் கல்வியில் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்கள் போல் போற்றுவது எமது கடமை. எனவே நூல் நிலையங்கள் முதலியவற்றில் காணப்படும் நூல் களைக் கிழிக்காமல் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

01) ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது?

.....

02) "விழிகள்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

.....

03) "சிறுமை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.....

04) "கவனமாக" என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

.....

05) "அங்குள்ளவர்களின்" என்பதைப் பிரித்து எழுதுக.

.....

06. தன்மைப் பன்மை வினைச் சொல்லினை எழுதுக. .....

www.kedt.lk

02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) சிறந்த ..... (நூல் / நூல்கள்) நல்ல நண்பனைப் போன்றது.
2) எமது .....(கவலையீனம் / கவனயீனம்) காரணமாகவே விபத்துக்கள் ஏற்படுகின்றன.

03) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லினை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) நாம் அனைவரும் பேருந்தில் கதிர்காமத்துக்குப் .....(போனோம் / போவேன்).
2) காகம் முட்டைகளிட்டுக் குஞ்சுகள் ..... (பொரித்தன / பொரித்தது)
3) பூக்கள் ..... (மலர்ந்தது / மலர்ந்தன)
4) காற்று வீசியதால் மரங்கள் ..... (முறிந்தது / முறிந்தன)

04) சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
1) நாகரிகம் / நாகரீகம்
2) கோடாலி / கோடரி

05) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.
1) பன்றி உறுமும் என்பது போல நாய் .....